**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Structure and Development of Sindu Literature

**Mrs. M.Gnanamalar**, Research Scholar of Tamil, Airinyar Anna Government Arts College, Seyyar - 604407.
**ORCiD: https://orcid.org/0000-0002-3256-958X**
**DOI: 10.5281/zenodo.6621075**

## Abstract

*Sindhu is a genre of folk music. Sindhu form delights from the vocal songs sung by the Tamil people due to their godly pleasures. The origin of the word 'Sindhu' in the ancient grammar book* Tolkappiyam *can be as follows. The word 'Sindhu' can be found in the verses "Alavum Sindhum Vellaikkuriya". The various evolutions of language were fundamental to the emergence of Sindhu literature. Man has been expressing his thoughts and deep feelings through oral literature. Oral literature is known as "folk song". The villagers used this song form to express their joys and sorrows to celebrate festivals and ceremonies. Simple regional proverbs and the versed were included. The folk songs were later turned up into the modern genre "Sindu Literature".*

**Keywords:** Village, People, Sindu Literature, Folk Poems.

## References

[1] T.SaravanaTamilan - *Yappu Nool.*
[2] Chennai Library Website.
[3] *Senthan Divagaram*
[4] Serai Arivanar. *Panchc Marapu*.
[5] Tamilannal - *Tholkappiyam.*
[6] Pala.Velappan - *Sindu Ilakkiyam*.
[7] *Pingala Nigandu*.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சிந்து இலக்கியங்கள்-வடிவமும் வளர்ச்சியும்

**திருமதி.மா.ஞானமலர்**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அறிஞர் அண்ணா அரசுக்கலைக்கல்லூரி, செய்யாறு – 604 407.
**ORCiD: https://orcid.org/0000-0002-3256-958X**
**DOI: 10.5281/zenodo.6621075**

**ஆய்வுச்சுருக்கம்**

*சிந்து என்பது ஒரு நாட்டுப்புற இசைப்பாடல் வகை, இறைப்பற்று இன்பதுன்ப காரணமாக மக்கள் பாடிய வாய்மொழி இசைப்பாடல்களிலிருந்து முகிழ்த்தவை சிந்து வடிவங்கள் ஆகும். தொன்மை இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சிந்து எனும் சொல் இடம் பெற்றமையைப் பின்வருமாறு அறியலாம். "அளவும் சிந்தும் வெள்ளைக்குரிய" எனும் நூற்பாவில் சிந்து எனும் சொல் இடம் பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. மொழியின் பல்வேறு பரிணாம வளர்ச்சி இலக்கியங்கள் தோற்றம் பெறுவதற்கு அடிநாதமாக விளங்கியது. மனிதன் தங்கள் எண்ணங்களையும் ஆழ்ந்த உணர்வுகளையும் வாய்மொழி இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தி வந்தனர். வாய்மொழி இலக்கியங்களை "நாட்டுப்புறப்பாடல்" எனும் வடிவத்தில் பெயர் பெற்றது. கிராமப்புற மக்கள் தங்கள் இன்ப துன்பங்களை வெளிப்படுத்தவும் தொழிற்களைப்பினை நீக்கவும், விழாக்கள் சடங்குகள் சிறக்கவும் பாடல்வடிவத்தினைக் கையாண்டு வந்தனர். எளிமையான வட்டார வழக்குச் சொற்களும் இராக அமைப்பும் இடம் பெற்றன. நாட்டுப்புறப் பாடல்களே பிற்காலத்தில் "சிந்து இலக்கியம்" தோன்றியது.*

**திறவுச்சொற்கள்:** கிராமப்புறம், மக்கள், சிந்து இலக்கியம், நாட்டுப்புற பாடல்.

**தொடக்கவுரை**

மனிதர்களின் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்க கருவியாக மொழி தோன்றியது. மொழியின் பல்வேறு பரிணாம வளர்ச்சி இலக்கியங்கள் தோற்றம் பெறுவதற்கு அடிநாதமாக விளங்கியது. மனிதன் தங்கள் எண்ணங்களையும் ஆழ்ந்த உணர்வுகளையும் வாய்மொழி இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தி வந்தனர். வாய்மொழி இலக்கியங்களை "நாட்டுப்புறப்பாடல்" எனும் வடிவத்தில் பெயர் பெற்றது. கிராமப்புற மக்கள் தங்கள் இன்ப துன்பங்களை வெளிப்படுத்தவும் தொழிற்களைப்பினை நீக்கவும், விழாக்கள் சடங்குகள் சிறக்கவும் பாடல்வடிவத்தினைக் கையாண்டு வந்தனர். எளிமையான வட்டார வழக்குச் சொற்களும் இராக அமைப்பும் இடம் பெற்றன. நாட்டுப்புறப் பாடல்களே பிற்காலத்தில் "சிந்து இலக்கியம்" தோன்றுவதற்கு வித்தாக அமைந்தது எனலாம்.

**சிந்து இலக்கியம்-தோற்றம்-வளர்ச்சி:**

சிந்து என்பது ஒரு நாட்டுப்புற இசைப்பாடல் வகை, இறைப்பற்று இன்பதுன்ப காரணமாக மக்கள் பாடிய வாய்மொழி இசைப்பாடல்களிலிருந்து முகிழ்த்தவை சிந்து வடிவங்கள் ஆகும். தொன்மை இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சிந்து எனும் சொல் இடம் பெற்றமையைப் பின்வருமாறு அறியலாம். "அளவும் சிந்தும் வெள்ளைக்குரிய" எனும் நூற்பாவில் சிந்து எனும் சொல் இடம் பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது.

**சிந்து இலக்கியம்-சொல் விளக்கம்:**

தொன்மைக்காலத்தில் உருவான நாட்டுப்புற இலக்கியங்களை மக்களைக் கவரும் தன்மைக்கொண்டது. நாட்டுப்புறப்பாடல் வடிவில் சிந்து இலக்கியமும் உள்ளடங்கும் சிந்து எனும் சொல்லிற்கு அகராதிகள் பின்வரும் நிலையில் விளக்கம் தருகிறது.

**“இசைப்பாவகை, ஒருபா, ஒருவகை, வரிக்கூத்து**
**சிந்தடி சிந்துக்கவி பண்”**

என்று பொருள் தருகின்றது. தொல்காப்பியர் நாட்டுப்புறப்பாடல்களைப் பண்ணத்தி என்று குறிப்பிடுகின்றார். அவற்றினைக் கீழ்க்காணும் நூற்பா உணர்த்துகின்றது.

**“பாட்டிடைக்கலந்த பொருள் ஆகிப்**
**பாட்டின் இயல பண்ணத்தியயே”**

என்ற நூற்பாவில் பண்ணத்தி என்பதற்கு நாடச்செய்யுளாகிய பாட்டு மடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டும் கடகண்டு என்று பெயர்படும் என்று பேராசிரியர் விளக்கம் தருகின்றார். சிந்து இலக்கியம் குறித்து பழ.வேலப்பன் பின்வரும் நிலையில் விளக்கம் தருகின்றார். சிந்து நூல்கள் காப்பியங்களைப் போலவோ, புராணங்களைப் போலவோ அல்லது சிற்றிலக்கியங்களைப் போலவோ விரிந்த அல்லது விதிக்கு உட்பட்ட இலக்கியங்களைப் போலவோ அல்ல இன்னும் சொல்லப்போனால் பாவின் இலக்கணங்களைக் கூறும் பண்டைப்பாட்டியல் நூல்களிலே இடம் பெறாத பாட்டு சிந்துப்பாட்டு ஆகும் என்று விளக்கம் தருகின்றார். சிந்து என்பது வடமொழியில் ‘Sindhu’என்று அழைப்பர். இதற்கு ஓர் ஆறு, ஊற்று, வெள்ளம், கடல் பண் என்று பொருள்கொள்ளலாம்.

**“சிந்து என்பது இசைத்தமிழ் பாகுபாடுகளில் ஒன்றாகும். அது ஐந்து உறுப்புகளால் ஆனயாப்பு விசேடம், அவை பல்லவி, அனுப்பல்லவி மூன்றுகண்ணிகள் அடங்கிய சரணம்”** என்று சென்னை நூலகம் எனும் இணையதளம் சிந்து என்பதற்கு விளக்கம் தருகின்றது. சிந்து என்பது நீர், ஓர், தேசம், ஓர்யாற, கடல் முச்சீரடி, குறள்வடிவு எனும் பொருளைத் தருகிறது. இவற்றினை,

**“ஈரிருபண்ணும் எழுமூன்று திறனும்**
**ஆகின்றன இவை இவற்று பாலையாழ்**
**செந்து மண்டலியாழ்பவுரி மருதயாழ் (1380)**

இப்பாடலில் செத்து என்ற பெயரின் சிதைவே சிந்து என்ற கருத்தில் சிந்தொகுக்கும் சொல்லினார் என்கிறது. சேந்தன் திவாகரம் சிந்து என்ற சொல்லுக்குச் சிந்தே குஞ்சம் குறளே வாமனம் என்கிறது.

**சிந்துப்பாடலின் இலக்கணம்:**

சிந்து இலக்கியம் என்பதற்கு பல அகராதிகளும் பல்நிலைகளில் விளக்கம் தருகின்றது. அந்நிலையில் த.சரவணத்தமிழன் என்பவர் சிந்துப்பாடல் என்பதற்கு கீழ்காணும் நிலையில் விளக்கம் தருகின்றார்.

**“முதலடிச்சீர்களும் தனிச்சொல் அன்றி**
**மறியடிச் சீர்களும் எண் ஒத்து இருப்பின்**
**சமநிலைச் சிந்தாம் ஒன்றின் மற்றொன்றுசீர்**
**மிகுநிலையாயின் வியனலைச் சிந்தம்”**

எனும் நூற்பாவில் முதலடியிலேயே தனிச்சொல் பெற்று வருவது சிந்து ஆகும். அடுத்த

முதலடியும் அடுத்த அடியும் சீரின் எண்ணிக்கையில் ஒதுது இருப்பின் அது சமநிலைச் சிந்து ஆகும். எண்ணிக்கை வேறுபட்டு இருப்பின் வியனிலைச் சிந்தாகும் என்று விளக்கம் தருகின்றார்.

**சிந்து இலக்கியத்தின் வளர்ச்சி நிலை:**

சிந்து எனும் இலக்கியம் 1920 ஆம் ஆண்டு நூற்றாண்டில் தான் தனி வளர்ச்சியை எய்தியது எனலாம். ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவால் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் மரபைவிட்டுப் பாமரமக்களுக்குப் புரியும் எளிய இலக்கியமும் உரைநடைகளும் தோன்றலாயின. கிறிஸ்துவ சமயமும் இஸ்லாமிய சமயமும் பரவத் தொடங்கியப்பின் இக்காலக் கவிஞர்கள் சமயச் சிறப்புகளையும், நம்பிக்கைகளையும் மக்களுக்கு உணர்த்துவதற்கு மக்களிடம் நன்கு பயின்று வந்த நாட்டுப்புற இசைப்பாடலான சிந்துவினைத் தம் கவிதைக்குரிய வடிவமாகக் கொண்டனர். கி.பி.19ஆம் நூற்றாண்டுக்கு முன் காணமுடியாத வழிநடைச்சிந்து, வளையற்சிந்து இலாவணித்தென்பாங்கு சிந்துப்பாடல்கள் வளர்ச்சியடையத் தொடங்கின. பின்பு நொண்டிச் சிந்து, ஆனந்தக்களிப்பு, இலாவணி ஆகியவை தனித்தனி வடிவங்களையும் கொண்டு வளர்ச்சியடைந்தன.

கிபி.20 ஆம் நூற்றாண்டுப் பாவலர்களாகிய சுப்பிரமணிய பாரதியார், சங்கரதாசு சுவாமிகள், நாமக்கல் வெ.இராமலிங்கம்பிள்ளை, தேசியகவி விநாயகம் பிள்ளை, பாரதிதாசன், சுத்தானந்த பாரதி, வாணிதாசன், கண்ணதாசன் போன்றோர் சிந்துப்பாடல்களைப் பலவடிவங்களில் பாடிப் புதிய அமைப்புடைய சிந்துக்களையும் உருவாக்கி வளர்ச்சிப்பெறச் செய்துள்ளனர். சான்றாகப் பாரதியார் சிந்துப்பாடல்களாலேயே “பாஞ்சாலி சபதம்” எனும் குறுங்காப்பியத்தினைப் பாடினார். பாரதிதாசன் பாரதியாரைப் புகழ்ந்து “சிந்துக்குத் தந்தை” என்று பாராட்டுகின்றார். நாட்டுப்புறப்பாடல் என்று ஒதுக்கப்பட்ட சிந்து பிற்காலத்தில் பல்வேறு பாவலர்களை உருவாக்கி இலக்கியத்தரம் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது.

**சிந்து இலக்கியத்திற்கு வழங்கும் வேறுபெயர்கள்:**

வாய்மொழி இலக்கியமாக உருவாக்கம் பெற்ற சிந்து இலக்கியம் பலபெயர்களால் சுட்டப்பட்டு வந்தன. அவை சேவற்பாட்டு, புறாப்பாட்டு, தென்பாங்கு, ஒயிற்கும்மி, கோலாட்டப்பாட்டு, கிளிக்கண்ணி, ஏவல்பாட்டு, உடுக்கைப்பாட்டு இன்னபிற பெயர்களில் சுட்டப்பட்டு வந்துள்ளன. நாட்டுப்புற இலக்கியவகையில் தோற்றம் பெற்று பிற்காலத்தில் நூல் வடிவம் பெற்று தனிச்சிறப்புடன் விளங்கும் சிந்து இலக்கியங்களின் சிறப்பு அளப்பரியது.

**சிந்து இலக்கியம் பாடியவர்கள்:**

சிந்து இலக்கியங்கள் மீது ஈடுபாடு கொண்டு பிற்காலத்தில் வந்த இலக்கியப்படைப்பாளிகள் சிந்து பாவகையினைப் பாடியுள்ளனர். அவர்களில் தாயுமானவர், குணங்குடி மஸ்தான்சாகிபு, இரமலிங்க அடிகள், அண்ணாமலை ரெட்டியார், கோபாலகிருஷ்ண பாரதியார் போன்றோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார். சித்தர்கள் தங்கள் கருத்தாக்கங்களை எடுத்துக்காட்ட சிந்து இலக்கியங்களைக் கையாண்டு வந்துள்ளனர். அவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் இடைக்காடகர், காடுவெளிச்சித்தர், குதம்பைச்சித்தர், அகப்பேய்ச்சித்தர், பாம்பாட்டிச்சித்தர், கொங்கனச்சித்தர் ஆகியோர் சிந்து இலக்கியப் பாடல்களைக் கையாண்டுள்ளனர் என்பதை இவர்கள் பாடல் வழி அறியமுடிகின்றது. சீர்மிகு சிந்தனை கொண்டு பிற்காலத்தில் வந்த படைப்பாளர்கள் சிந்து ச.சு.சங்கரலிங்க நாடார், கனகசபாபதிபிள்ளை, அஷ்ட்டவதானம் சபாபதி முதலியார், பெ.சூ.பாலராஜ்

பாஸ்கரன், கவிதாமணி, செயலட்சுமி, தென்னமாதேவி போன்றவர்கள் சிந்து இலக்கியங்களைப் பாடிசிந்து இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணைப்புரிந்தவர்கள் ஆவார்.

**சிந்து இலக்கியங்களின் வகைகள்:**

சிந்து இலக்கியங்களைப் பலநிலைகளில் வகைப்படுத்தலாம். அவை 1. காவடிச்சிந்து 2. வரலாற்றுச்சிந்து 3. வழிநடைச்சிந்து 4. நொண்டிச்சிந்து 5. கதைச்சிந்து 6. விபத்துச்சிந்து 7. நீதிச்சிந்து எனும் நிலைகளில் வகைப்படுத்தலாம்.

**சிந்துப்பாடலின் அமைப்பும் அழகும்:**

நாட்டுப்புறப்பாடல் வடிவமைப்பில் தொடங்கிய சிந்துப்பாடல் பின்பு தனக்கென ஓர் அமைப்பையும் அழகியலையும் பெற்றுவிளங்கியது எனலாம். சிந்து இலக்கியத்தின் அமைப்பையும் சிறப்பு இயல்புகளையும் பல அறிஞர்களும் நூல்களும் நமக்குப் புலப்படுத்துகின்றன.

**“பஞ்சமரபு”** எனும் நூல் சிந்துபாவின் அமைப்பினைச் சுட்டுகின்றது.

**“பண்ணுமியாழ் வண்ணம் பாடிடச் சிந்தென்றார்**
**எண்ணத்தில் மிக்காய்ந்தோர் எண்”**

என்ற நூற்பா இசைத்தன்மையுடன் சிந்துப்பாடல்கள் விளங்குவதைக் காட்டுகின்றது. சிந்துப்பாடலின் இயல்பினைப் பின்வருமாறு இரா.திருமுருகன் சுட்டுகின்றார்.

1. இரண்டடியாய் நடத்தல்
2. அளவு ஒத்து வருதல்
3. தாளத்துடன் பொருத்துதல் போன்ற இயல்புகள் கொண்டு விளங்குவதைக் காட்டுகின்றார்.

**வீரசோழியம் உணர்த்தும் சிந்துப்பாவின் இயல்பு:**

தொன்மை இலக்கண நூலான வீரசோழியம் சிந்துப்பாவின் இயல்பினைத் திறம்படச் சுட்டுகின்றது.

**“இரண்டடி ஒத்து அழிசீர் இலாதது சிந்தாம்”**

என்ற நூற்பா வழி காட்டுகின்றார். இரண்டடிப் பெற்று இசைத்தன்மையோடு வருவது சிந்து என்று விளக்கம் பகர்கின்றன.

**சிந்து இயல்பு குறித்து அறிஞர்கள் விளக்கம்:**

சிந்துப்பாவின் இயல்பு குறித்து “புலவர் குழந்தை” தம் நூலில் தெளிவு பட பதிவுசெய்துள்ளார்.

1. ஓர் எதுகை பெற்ற இரண்டு அடிகள் அளவொத்து வரும் நான்கடிகளும் அவ்வாறு வரும்.
2. தனிச்சொல்லுக்கு முன்னும் பின்னும் உள்ளவை. அரையடிகள் அவை இரண்டு சேர்ந்து ஓரடியாகும்.
3. சிந்து என்பது இசைப்பா வகை.
4. ஒரு சிந்துப்பாட்டில் வரும் ஒவ்வொரு சிந்தும் கண்ணி எனப்படும்.

என்று சிந்து இலக்கியத்தின் சிறப்பினைப்புலப்படுத்துகின்றார்.

சிந்து இலக்கியத்தின் தனித்தன்மையினை கி.வா.ஜகந்நாதன் கீழ்க்காணும் நிலைப்பாட்டில் பதிவு செய்துள்ளார்.

1. சிந்து என்பது இசைப்பாட்டு வகைகளில் ஒன்று
2. அளவொத்து வரும் அடிகளை உடையது

என்று சிந்துப்பாவின் இயல்பினை எடுத்துக் காட்டுகின்றார்.

**முடிவுரை**

சிந்து இலக்கியங்களைப் பெரும்பாலும் மூன்று சீர்களைப் பெற்று சிந்தடிகளால் ஆனதால் அதைப் பழங்காலத்தில சிந்து என வழங்கினார் என்று சிந்துவின் சிறப்பில்பினைச் சுட்டுகின்றார். இவ்வாறாக பல ஆய்வு நூல்களும், அறிஞர்களும் சிந்து இலக்கியத்தின் வடிவமைப்பினையும் வளர்ச்சி நிலைகளையும் எடுத்துக்காட்டியுள்ளனர் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. சரவணத் தமிழன்.த – *யாப்பு நூல்*
2. சென்னை நுலக இணையதளம்
3. *சேந்தன் திவாகரம்* பக்.34
4. *சேறை அறிவாணர் பஞ்சமரபு* – ப.85
5. தமிழண்ணல் (2.ஆ) *தொல்காப்பியம் - செய்யுளியல்* நூ.ப.180
6. தொல்.பொருள் - சூ.370
7. பழ.வேலப்பன் - *சிந்து இலக்கியம்* - ப.2
8. பிங்.நிக.1380

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.